**மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் - 2014**

---

மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1982 இன் 41 ஆம் இலக்க தேசிய மிருகக்காட்சிசாலைகள் அதிகாரச்சட்டத்தின் 08 (5) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிருகக்காட்சிசாலைகள் அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்கும் போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,764,000 ஆன வைப்புத்தொகை மற்றும் கால்நடை உணவு வழங்குனரால் வைக்கப்பட்ட பிணை வைப்பான ரூபா 2,388,358 தொகை நிதியத்தின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிப்பதற்குப் பதிலாக மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 31,996,982 தொகை வருமான வரியாக வருமானக் கூற்றில் வரிக்கு முன்னரான இலாபத்தில் கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | விடயங்கள் | பெறுமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| (அ) | முடிவுறாத வேலை (வாகொல்ல புதிய மிருகக் காட்சிசாலை, சபாரி தோட்டம் மற்றும் தெஹிவளை மிருகக் காட்சிசாலை என்பவற்றின் நிர்மாணங்களுக்குரிய) | 756,763,930 | பௌதீக ரீதியாக வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிர்மாணங்களின் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் செலவிடப்பட்ட கிரயத்தை வெவ்வேறாக காட்டும் பட்டோலை |
| (ஆ) | நினைவுப் புத்தகங்கள் | 2,032,544 | 2012 ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட புத்தகங்கள் தொடர்பான பகிர்ந்தளித்தல் தொடர்பான பகிந்தளித்தல் பதிவேடு |
| (இ) | கடன்கொடுத்தோர் | 340,982 | விரிவான பட்டோலையும் காலப் பகுப்பாய்வும் |
| (ஈ) | நுழைவுச் சீட்டு இருப்பு | 3,306,042 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |
| (உ) | நினைவுச்சின்ன பொருள் இருப்பு | 7,168,059 | இருப்பு மெய்மையாய்வு அறிக்கை |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

**3 நிதி மீளாய்வு**

**3.1. நிதி விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 550,500,998 மிகையாக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 415,114,491 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 135,386,507 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது.

**3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 187,403,875 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன், செலவினங்கள் ரூபா 46,328,652 ஆல் அதிகரித்திருந்தது. மேலும் திரட்டிய நுழைவுச் சீட்டுக்கள் வருமானம் முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு ஒப்பாக ரூபா 147,533,970 ஆன தேறிய அதிகரிப்பொன்று இருந்த போதிலும், தெஹிவளை மிருகக்காட்சிசாலையிலிருந்து பெற்ற வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 1,322,390 ஆல் குறைவடைந்திருந்தது.

**04 செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

**4.1.1 பார்வையாளர்களின் வருகையும் வருமானமும்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் தெஹிவளை மிருகக்காட்சிசாலை மற்றும் பின்னவெல யானைகள் சரணாலயம் என்பவற்றை பார்வையிடுவதற்காக வருகை தந்தோரின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் கிடைத்த வருமானம் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) தெஹிவளை மிருகக்காட்சிசாலை**

| | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|
| | **வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை** | **பார்வையாளர் களிடமிருந்து கிடைத்த வருமானம்** | **வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை** | **பார்வையாளர் களிடமிருந்து கிடைத்த வருமானம்** |
| | | **ரூபா** | | **ரூபா** |
| உள்நாடு | 1,249,322 | 98,383,110 | 1,429,322 | 112,079,300 |
| வெளிநாடு | 28,823 | 46,895,300 | 27,120 | 34,521,500 |
| மொத்தம் | 1,278,385 | 145,278,410 | 1,456,442 | 146,600,800 |

தெஹிவளை மிருகக்காட்சிசாலைக்கு வருகை தந்த வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1,703

ஆல் அல்லது 6 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அதன் மூலம் மொத்த வருமானம் ரூபா ரூபா 12,373,800 ஆல் அல்லது 35 ஆல் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் உள்நாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை மற்றும் வருமானம் முறையே 179,760 ஆலும் ரூபா 13,696,190 ஆலும் குறைவடந்திருந்தது.

**(ஆ) பின்னவல யானைகள் சரணாலயம்**

| | 2014 | | 2013 | |
|---|---|---|---|---|
| | **வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை** | **பார்வையாளர் களிடமிருந்து கிடைத்த வருமானம்** | **வருகை தந்த பார்வையாளர்களின் எண்ணிக்கை** | **பார்வையாளர் களிடமிருந்து கிடைத்த வருமானம்** |
| | | **ரூபா** | | **ரூபா** |
| உள்நாடு | 444,483 | 32,601,730 | 437,628 | 33,115,310 |
| வெளிநாடு | 320,040 | 698,887,000 | 278,740 | 549,517,060 |
| மொத்தம் | 764,523 | 731,488,730 | 716,368 | 582,632,370 |

பின்னவெல யானைகள் சரணாலயத்திற்கு வருகை தந்த வெளிநாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 41,300 ஆல் அல்லது 15 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 149,369,940 ஆல் அல்லது 27 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது உள்நாட்டு பார்வையாளர்களின் எண்ணிக்கை 6,855 ஆல் அல்லது 9 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எனினும் உள்நாட்டு பார்வையாளர்களிடமிருந்து கிடைத்த வருமானம் ரூபா 513,580 ஆல் குறைவடைந்திருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மிருகங்களின் தேவைப்பாடு தொடர்பான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைத் தயாரிக்கும் போது அதற்காக நியமிக்கப்பட்ட குழுவொன்றின் மூலம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், செயன் முன்னேற்றத்தைப் பரிசோதிக்க கூடிய வகையில் அறிக்கையொன்றை தயாரித்து அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மிருகக்காட்சிசாலையில் இருந்த இறந்த மிருகங்களுக்காக புதிதாக மிருகங்களைக் கொள்வனவு செய்வதற்கான வேலைத் திட்டமொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு ரூபா 95,222,500 பெறுமதியான 16 யானைகள் வெளித்தரப்பினருக்கு பராமரிப்பதற்காக வழங்கப்பட்டிருந்ததுடன், ஆண்டின் இறுதியில் உள்ளவாறு அம்மிருகங்களின் உள்ளதன்மை தொடர்பாக உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரயோகரீதியாக வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட 70 ஒப்பந்தங்களுக்குரிய ரூபா 1,488,565,804 ஆன பட்டியல் பெறுமதி பூர்த்தி செய்யப்படாத வேலையாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது. இச்செலவினங்களுக்குரிய கொடுப்பனவுகள் நிதியத்திலிருந்து செய்யப்பட்ட மற்றும் திணைக்கள செலவினத் தலைப்பின் கீழ் செய்யப்பட்ட செலவினமாக ஏற்பாடுகளை மேற்கொள்ளாமலும், கொடுப்பனவுகளுக்குரிய பட்டியல்களில் விலை விலகல் தொடர்பாக

உறுதிப்படுத்துவதற்காக சுயாதீனமான நிறுவனமொன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை தீர்வு செய்யாமை காரணமாக நிர்மாண நிறுவனங்களுக்கு தமது இறுதி பட்டியலைச் சமர்ப்பிப்பதற்கு முடியாமல் காணப்படுவதாலும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணிப்புக்கள் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்ய முடியாதிருந்தது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மீளாய்வாண்டினுள் தெஹிவளை, பின்னவல மற்றும் அம்பாந்தோட்டை சபாரி பூங்காக்களில் மிருகங்களுக்காக மிருக உணவு வழங்கும் மூன்று கேள்விகள் தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட முதலாவது கேள்விதாரர் வழங்கலுக்காக முன்வராமை காரணமாக இரண்டாவது கேள்விதாரருக்கும், மேலும் இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பாக இரண்டாவது கேள்விதாரர் சமர்ப்பிக்காமை காரணமாக மூன்றாவது கேள்விதாரர் என்ற வகையில் அடுத்த வழங்குனருக்கு வழங்கல் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.
முன்னைய ஆண்டுகளிலும் இந்நிலைமை அவதானிக்கப்பட்டதுடன், வழங்குனரின் வழங்கல் இயலுமை தொடர்பாக உறுதிப்படுத்தப்படும் (நிதிசார் இயலுமை, வங்கிக் கணக்குகள், முன்னைய ஆண்டுகளின் கணக்கு கூற்றுக்கள்) மற்றும் சட்ட மற்றும் அமைப்பு ரீதியான நிலைமை தொடர்பான (பதிவுச்சான்றிதழ் உட்பட) நிதியம் கருத்திற் கொள்ளப்படாமையால் இவ்வாறு வழங்கலைப் பொறுப்பேற்காமைக்கான காரணங்களாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக மிருகக்காட்சிசாலை அபிவிருத்தி நிதியத்தினால் உள்ளக கணக்காய்வு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாாய்வாண்டின் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 490,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் செலவினம் ரூபா 739,223,871 ஆக இருந்தமையால் ரூபா 149,223,871 தொகை மதிப்பீட்டை மிகைத்து செலவிடப்பட்டிருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) கணக்கீடு
(இ) பதிவேடுகளைப் பேணுதல்
(ஈ) மிருகங்களுக்கான உணவு கொள்வனவு
(உ) இருப்புக் கட்டுப்பாடு